iSprout

Inspiring Workspaces

இணை பணியிட வணிக மையங்களை அமைப்பதில் முன்னணி நிறுவனமாகிய

# ஐஸ்ப்ரவுட் நிறுவனம் பணியிட வணிக மையம் துவக்கம்




சென்னை, பிப். 02 : சென்னை போன்ற மாநகரங்களில் அலுவலக பணியிடங்களுக்கான தேவை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, இணை பணியிட வணிக மையங்களை அமைப்பதில் முன்னணி நிறுவனமாகிய ஐஸ்ப்ரவுட் நிறுவனம், ஓஎம்ஆர், பெருங்குடியில் உள்ள சரவணா மேட்ரிக்ஸ் டவரில் 5வது மற்றும் 6வது மாடியில் தங்களுடைய 6வது இணை பணியிட வணிக மையத்தை 31 ஜனவரி 2020 அன்று துவங்கி வைத்தது. இவ்வணிக மையத்தில் சுமார் 60,000 சதுர அடி பரப்பளவில் 1100 இணை பணியிடங்களை அமைக்க அந்நிறுவனம் இலக்கு வைத்துள்ளது. வெவ்வேறு துறையை சேர்ந்த பணியாளர்கள் இணைந்து பணிபுரியும் பணியிட அமைப்பு துறையில் முக்கிய நிறுவனமாக விளங்கி வரும் ஐஸ்ப்ரவுட் நிறுவனம், அதன் புதுமையான வடிவமைப்புகள் மற்றும் மேம்பட்ட வாடிக்கையாளர் சேவைகளின் காரணமாக இத் துறையில் மற்ற நிறுவனங்களுக்கு முன்னோடியாக உள்ளது.

ஐஸ்ப்ரவுட் வணிக மையம் குறித்து விரிவாக பேசிய அதன் தலைமை நிர்வாக அதிகாரியும் இணை நிறுவனருமான சுந்தரி பதிபாண்ட்லா கூறுகையில், உங்கள் வணிக யோசனைகளை நிறுவனங்களாக மாற்ற உதவ எங்கள் தொழில் வல்லுநர்களின் குழு இங்கே உள்ளது. தவிர, எழுச்சியூட்டும் இணை பணியிடங்களை வழங்குவதன் மூலம், ஐஸ்ப்ரவுட் அதன் வாடிக்கை யாளர்களுக்கு தேவைகளின் அடிப்படையில் வணிக அமைப்பு மற்றும் நிர்வாகத்திற்கு உதவுகிறது. ஐஸ்ப்ரவுட் நிறுவனம் இந்தியா முழுவதும் இணை பணியிட அமைப்புகளை வழங்கும் நோக்குடன், ஹைதராபாத், விஜயவாடா மற்றும் சென்னைக்கு பிறகு, பெங்களூர், பூனே, நொய்டா மற்றும் குர்காவில் எங்களுடைய இணை பணியிட வணிக மையங்களை அமைக்கவுள்ளோம் என்று கூறினார்.

வாடிக்கையாளர்களுக்கு ஐஸ்ப்ரவுட் வணிக மைய இணை பணியிட தன்மைகள் மற்றும் அதன் முழு அளவிலான சேவைகள் குறித்து அவர் விளக்குகையில், நிறுவன ஒருங்கிணைப்பு, கணக்கியல், ஊதியம், பதிவுகள், ஜிஎஸ்டி தாக்கல், டிடிஎஸ் தாக்கல், வரி மற்றும் தணிக்கை போன்ற வணிக ஆதரவு சேவைகளை எவ்வாறு திறம்பட வழங்குகிறது என்று எடுத்துக் கூறினார்.

**PORE MURASU | DATE 02-FEB-2020**